11th September 1959]

SRI N. K. PALANISAMI : என்ன காரணத்தினல் தள்ளி வைக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதில் அடியிலிருந்து கட்டவேண்டும், மேலேயிருந்து ஒன்றும் செய்ய முடியாது. அதனுல்தான் கீழே இருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

SRI N. K. PALANISAMI : "போர்" கமிட்டியானது இந்த இரண்டு டிபார்ட்மெண்டுகளேயும் ஒன்ருக இணைத்தால் எஸ்டாபிலிஷ்மெண்ட் செலவு குறையும் என்று சிபாரிசு செய்திருக்கிறதா ? அப்படியென்ருல் இன்னும் இதை தள்ளிவைப்பதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதை துரிதமாக நடத்திவிட முடியாது, அவ்விதம் நடவடிக்கை எடுத்தால் இன்னும் அதிகமான கஷ்டங்கள்தான் ஏற்படும். ஆகவேதான் கீழேயிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அமால்கமேஷன் செய்ய ஏற்பாடு இருக்கிறது.

Sethusamudram Scheme

* 299 Q.—SRI P. G. MANICKAM, SRI K. SATTANATHA KARAYALAR AND SRI P. U. SHANMUGAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether preliminary steps have been taken up for the inclusion of Sethusamudram Scheme in the Third Five-Year Plan : and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) The Government of India have been addressed to include the scheme in the Third Five-Year Plan and accord it high priority in the Central Sector of the Third Five-Year Plan.

SRI P. G. MANICKAM : ஸார், இந்தத் திட்டத்திற்காக எவ்வளவு ரூபாய் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்றது ? அப்படியானுல் அதன் விவரம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கனவே சேதுசமுத்திர திட்டத்துற்கு என்று 998 லட்சம் ரூபாய் அதாவது கிட்டதட்ட 10 கோடி ரூபாய் செலவு வரும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி மத்திய அரசாங்கம் பரிசீலனே செய்துகொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் பரிசீலனே செய்ததில், இதில் 30 கோடி ரூபாய் செலவு செய்யவேண்டிவரும் என்று கூறியிருக்கிருர்கள்.

SRI. K. SATTANATHA KARAYALAR : இந்தத் திட்டத்தை இரண்டு மூன்று பகுதிகளாக பிரித்து வேலே செய்ய முடியுமா ? ஏனென்ருல், இதற்கு 30 கோடி ரூபாய் செலவு செய்ய

[11th September 1959

வேண்டியிருக்கும் என்று எண்ணி இதை முழுவதுமே தள்ளி வைத்துவிட வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே இந்த திட்டத்தை இரண்டாவது அல்லது மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலேயே கணிசமான வேலை செய்ய இதைப் பல பிரிவு களாக பிரித்து வேலை செய்வதற்காக ஏதாவது திட்டம் வகுக்கப் படுமா ?

THE HON. SRI P. KAKKAN : மத்திய சர்க்காரிடத்தில் இதைப் பற்றி முடிவு செய்யும்போது இந்தக் கருத்தை தெரிவிக்கலாம்.

SRI P. U. SHANMUGAM : இந்தத் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலேயே வேலை செய்து முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : நம்பிக்கைதான் மனிதர்களுக்கு முக்கியம், அரசாங்கத்திற்கும் அப்படித்தான். அதல்லாமல் இதற்காக தனியாக உத்திரவாதம் அளிக்க முடியாது.

Handmade paper unit at Gandhigram

* 300 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா காந்தி கிராமத்திலுள்ள கையினால் காகிதம் தயாரிக்கப்படும் தொழிற்சாலையில் 1959-60-ல் எத்தனை பேர்களுக்கு பயிற்சியளிக்கப்படும் ?

(ஆ) இதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்க அரசாங்கத்தாரால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Eighteen candidates.

(*b*) Steps will be taken to absorb the candidates trained, in the five Hand-made Paper Units proposed to be started in this State during the current year.

SRI P. G. MANICKAM : ஸார், இவ்விதம் காகிதம் செய்வதில் பயிற்சி பெற்றவர்களுக்கு பிளாக்குகளில் வேலை கொடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது திட்டங்களை ஏற்படுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பிளாக்குகளில் எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் இது. இதில் பயிற்சி பெற்றவர்களை எல்லாம் இதில் வேலைக்கு வைத்துக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி திட்டமாக சொல்ல முடியாது. பேப்பர் யூனிட் தொழிலை நான்கைந்து இடங்களில் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் எல்லாம் இவர்களை நியமிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கலாம்.